ஓம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் துணை

# அருள்வாக்கின் அற்புதங்கள்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் மற்ற மஹான்களைப் போல ஒரு ஆஸ்ரமம் ஏற்படுத்திக்கொண்டு, சீடர்களை அங்கேயே தங்கவைத்து நிர்வாகம் நடத்தி அருட்சட்டம் பரவுவதற்கு வழிவகுக்கவில்லை.தனக்கு எந்த சொத்தும் கூடாது என்பதில் ஆரம்பத்திலேயே கண்டிப்பாக இருந்தவர். ஊருக்கு புறப்படும் முன்னால் தன் உடமைகளை சரிபார்ப்பது போல பார்த்துவிட்டு, யாரும் அன்பின் மிகுதியால் எந்த பொருளையும் பணத்தையும் அதில் வைக்கக்கூடாது என்பதில் கண்டிப்பாக இருந்தார். ஏன் அப்படிச் செய்தார்? என்று பார்ப்போம்.

ஆண்டவர் வழங்கிய அருட்சட்டம் அருளால் நடக்க வேண்டியது. பொருள் கொண்டு பிரசாரம் செய்து சமயத்திற்கு ஏற்ப மாற்றிக்கொண்டு ஆளுக்கு தகுந்தாற்போல் நேரத்திற்கு தகுந்தாற்போல் மாற்றிக் கொள்கிற சட்டம் கிடையாது. பொருளை பெறுவதற்கு வழி வகுத்தால் அந்தப் பொருள் கொடுப்பவர்களுடைய திருப்திக்காக ஏதாவது செய்ய வேண்டியிருக்கும். நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு அதனால் சங்கடம் ஏற்படும் என்பதை அறிந்தே ஆண்டவர் உண்டி பெட்டி கூட வைக்கக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டுள்ளார். இப்படி இருந்தால் எப்படி அருட்சட்டம் வளர்ச்சி அடையும்? நாம் ஏன் நோட்டீஸ் போட்டு, ரசீது போட்டு, நன்கொடை சீட்டுபோட்டு வசூல் பண்ணக்கூடாது என்று கேட்கத் தோன்றும். அவையாவும் அருட்சட்டத்திற்கு பொருந்தாது. அருட்சட்டம் வளர்ச்சி அடைய பாடுபடுகிறவர்கள் தங்கள் சொந்த முயற்சியாலோ சாமர்த்தியத்தாலோ பணபலத்தாலோ அதிகார பலத்தாலோ நடப்பதாக எண்ணிக்கொண்டால் அடுத்த நிமிடம் பலத்த அடி விழும். பிறகு அந்த ஆளுக்கு அட்ரஸே இருக்காது. எனவேதான் ஆண்டவர் வழி ஒரு அருமையான வழி என்று திரு.மாம்பலம் ஸ்வாமிகள் அடிக்கடி சொல்வார்கள். அதை நம் ஆண்டவரும் ஒரு பாடலில் மிகவும் அருமையாக சொல்லியுள்ளார்கள்.

மஹான்கள் நடத்துகிற அற்புதங்களை மக்கள் அப்படியே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பல நாள் கழித்து அந்த மஹான் ஜீவ சமாதி ஆன பிறகு அவர் சொன்ன கருத்துக்களை ஓரளவு ஒப்புக்கொள்வார்கள். பின்னால் வரும்

அடியார்களில் சிலரை பக்குவப்படுத்தி பல அற்புதங்கள் நிகழ்த்தினாலும் அந்த சமயத்தில் வாழ்கின்ற மற்ற அடியார்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எந்த நல்ல விஷயமும் மூடர்களுக்குப் புரியாது என்பதைத்தான் ஆண்டவர் 'பூத்திருக்கும் சோலையிலே' என்ற அருட்பாடலில் விளக்குகிறார்.

**'முன்னால் தெரியுமோடி ஏ தங்கம் மூடவுலகத்திற்கு**
**பின்னால் தெரியுமடி தங்கம் பிரியமுள்ள வாசனைகள்' என்ற**

வரிகளில் வரும் பாடலின் உட்கருத்தை புரிந்து கொண்டால் விளங்கும். நல்ல விஷயங்களை பல முறை எடுத்து சொல்லிதான் மூடவுலகத்திற்கு புரிய வைக்கவேண்டும் என்பதே அதன் பொருள். ஆண்டவர் வாழ்ந்த காலத்திலும், பின்னால் அருள்சக்தி அன்னை காலத்திலும், பிறகு மாம்பலம் ஸ்வாமிகள் செய்துகாட்டி அவர்தான் எல்லாம் நடத்துகிறார் என்பதையும் தனிப்பட்ட மனிதர்கள் விருப்பு வெறுப்பு அருட்சட்டத்தில் பயன் அளிக்காது என்பதையும் பல முறை விளக்கியுள்ளார்கள். அதையேதான் திரு பாலகவி ஸ்வாமிகளும் ஸஹஸ்ரநாம அர்ச்சனை மந்திரத்தில் விளக்கியுள்ளார்.

**''ஒன்றுயர் நெறியென ஓதுவை போற்றி' என்றும்**
**''ஓம்கருட் கொடியை உயர்த்தினை போற்றி'** என்றும் மிக

அருமையாக விளக்கியுள்ளார்கள். ஆண்டவர் அருள்நெறி எங்கெங்கே செல்ல எண்ணுகிறாரோ அங்கெல்லாம் அவருடைய அருட்கொடி செல்ல வேண்டும். அது ஒன்றே பல நன்மைகள் புரியும் என்பதை மிக அருமையாக ஒரே நெறி, ஏக நெறி, அருள் நெறி என்று அருட்சட்டத்தை ஏற்படுத்தி அது வளர்ச்சி அடைவதற்காக அருள்கும்பம், அருள்பேழை என்றெல்லாம் ஏற்படுத்தி எல்லாம் முறைபடுத்தப்பட்டு நடப்பதற்கு வழி வகுத்துள்ளார்கள். இனி அருள்கும்பம் பற்றிய விளக்கத்தை தெரிந்து கொள்வோம்.

உலகம் ஒரு பிரபஞ்சம். அதில் பூமி (நிலம்), நீர், ஆகாயம் என்ற மூன்று தத்துவமும் நெருப்பு, வாயு என்ற இரண்டு சக்திகளும் அடங்கியிருக்கிறது. அந்த பூமியை காட்டுவதற்கு சிவலிங்கம் உருவமும், 'நீர்' பற்றி காட்டுவதற்கு

கும்பகலசமும், ஆகாய வெட்டவெளி காட்டுவதற்கு அருட்கொடியும் வைத்து இந்த அருட்கும்பம் ஆண்டவர் ஏற்படுத்தியுள்ளார்.

சிவ-சக்தி ஐக்கியம்தான் எல்லா காரியங்களையும் நடத்துகிறது. சக்தியில்லையேல் சிவன் இல்லை. அந்த சிவன் ஜீவனாக மாறுவதற்கு சக்தியிருக்கிறது. ஜலம் ஒரு பெரிய சக்தி. வெள்ளம் வந்தால் அதை சுலபமாக தடுக்க முடியாது. மின்சக்தி எடுப்பதற்கு நீரின் சக்தியால் நேரிடையாக ஹைட்ரோபவர் ஸ்டேஷன் வேலை செய்கிறது. நீரிலிருந்து ஆவியாகவரும் நீராவி கொண்டு தெர்மல் ஸ்டேஷன் மின்சக்தி உற்பத்தி ஆகிறது. அணுசக்தியும் ஹெவி வாட்டர் என்ற நீரிலிருந்துதான் பிரிக்கப்பட்டு அணுசக்தி மின்நிலையமாக விளங்குகிறது. அப்படி ஜலம் ஒரு சக்தியாக இருப்பதால் முதலில் வருண ஜபம், கும்பம் கலசம் பூஜை செய்து குடமுழுக்கு பண்ணி கோவிலில் மூலஸ்தான மூர்த்திக்கு சக்தி கிடைக்க வழி பண்ணப்படுகிறது.

இப்படி உலகம் என்பதை காட்டுவதற்காக பிரபஞ்சமாக விளங்கும் சிவசக்தி ஐக்கியம்தான் அருட்கும்பம். அதிலே வெட்டவெளியை காட்டுவதற்காக ஆண்டவர் அருட்கொடி உள்ளது. **'உலகெங்கும் உடையவன் ஆட்சி விளங்கும். இப்போதேயா அது புரியும் இனி போகப்போகத் தான் புரியும்'** என்று கி.இராமலிங்கனார் 1937-ம் ஆண்டு எழுதிய வழிகாட்டும் வான்பொருள் 154-வது பக்கத்தில் வருகிற வார்த்தைகள் மிகவும் முக்கியமானவை.

திரு. பாலகவி ஸ்வாமிகள், திரு. மாம்பலம் ஸ்வாமிகள், அதை அடிக்கடி சொல்லி அப்படியே கண்கலங்குவார்கள். அப்படி ஆண்டவருடைய முத்திரையாக, அவர் அருள்பெற்ற பெட்டகமாக, ஒரு பெரிய சக்தி வீட்டிற்கு வந்து, எல்லாம் நன்றாக நடத்துவதற்காக, ஒரு பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்காக, ஒரு பெரிய விழா நடப்பதற்கு தைரியம் ஊட்டுவதாக, ஒரு பெரிய சமுதாயம் உருவாவதற்காக, ஒரு பெரிய சக்தி அனைவரையும் ஒன்று திரட்டுவதற்காக, யாவரும் சமம், ஒருவருக்கொருவர் வித்தியாசம் கிடையாது, ஜாதி மத பேதமும் இல்லாமல் எல்லோருக்கும் கும்பம் அருள்பாலிக்கும். ஆண்டவர் சக்தி எங்கெங்கு போகிறதோ அங்கெல்லாம் பல ஆச்சரிமான

விஷயங்கள் நடக்கும் என்பதையெல்லாம் ஒன்றாக இணைத்து ஏற்படுத்தப்பட்ட *சின்னமே* இந்த ‘**அருள்கும்பம்**’.

அதை எடுத்து ஒரு வீட்டில் வைத்து பூஜை செய்தால் ஷேமம் வருமே அல்லாது, பாபம் எதுவும் வராது. ஆண்டவருடைய அருட்குறிப்பை யாரும் அலட்சியப்படுத்தக்கூடாது (அருட்சட்டமே அருட்குறிப்பினால் மட்டுமே வளர்ச்சி அடைய ஆண்டவர் வழிவகுத்துள்ளார்.) எல்லா அருட்குறிப்பிற்கும் விளக்கம் இருக்கிறது. குறிப்பும், விளக்கமும் கொடுப்பாய், அளிப்பாய் என்று ஆண்டவர் ஸஹஸ்ரநாம அர்ச்சனை மந்திரத்தில் வருவது போல நிகழ்ச்சியில் உண்மைகள் காட்டி, நிகழ்வன முன்னர் உணர்த்துகிறார். அந்த ஸஹஸ்ரநாம விளக்கம் தவிர, ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையின் ஸஹஸ்ரநாம அர்ச்சனையில், **நிகழ்ச்சியில் உண்மைகள் காட்டுவோய் போற்றி** என்ற மந்திரத்திற்கு அடுத்த மந்திரம் **இகழ்ச்சி பொருத்தருள் இன்பே போற்றி** என்று யார் யார் நிகழ்ச்சி பற்றி இகழ்ச்சி செய்கிறார்களோ, அவர்கள் அறியாமையில் செய்கின்ற பாபத்தை போக்கி அருள்வாய் அன்னையே என்று திரு.பாலகவி ஸ்வாமிகள் குறிப்பிடுகின்றார்.

இப்படிப்பட்ட பல இகழ்ச்சிகள் ஆண்டவர் வாழ்ந்த காலத்தில் இருந்திருக்கிறது. அவர்கள் செய்த பாபத்திற்கு உரிய தண்டனையை அநுபவித்து தெரிந்த பிறகு யாரும் அருட்சட்டத்தையோ, அருள் நிகழ்ச்சியையோ குறை கூறுவதில்லை. (பிற்காலத்தில் கேந்திரங்கள் பூர்ண வளர்ச்சிபெற்று பல சாதனைகள் நிகழ்த்தப்போவது உண்மை. அதற்காகத்தான் ஆண்டவர் செய்துள்ள ஏற்பாடு இது. போகப் போக புரியும். உடையவன் பொறுப்பு.)

**(அருள்சக்தி அன்னை ஆஸ்ரமம், பிள்ளையார்குப்பம் - நாள்: 27-9-98)**